# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 03.08.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அல்முஃமினூன் –ன் 58 முதல் 62 வசனங்களையும், சூரா அல் பய்யினா –வின் 9 வது வசனத்தையும் ஓதினார்கள்:**

இந்த வசனங்களின் பொருள்: *நிச்சயமாக தங்களது இறைவனது திகிலுக்கு அஞ்சுபவர்களும்,*

*மேலும் தங்கள் இறைவனின் வசனங்களில் நம்பிக்கை கொண்டிருப்பவர்களும், மேலும் தங்கள் இறைவனுக்கு வேறெவரையும் இணையாக்காதவர்களும்,*

*மேலும் அவர்கள் எதை வழங்கினாலும் நாங்கள் எங்கள் இறைவனிடம் திரும்பிச் செல்பவர்களாக இருக்கின்றோம் என்ற எண்ணத்தில் உள்ளச்சம் கொண்டிருப்பவர்களும்,*

*ஆகிய இவர்களே நன்மைகளில் விரைந்து முன்னேறுபவர்களாவர். மேலும் இவர்கள் அவற்றில் ஒருவரையொருவர் முந்துபவர்களாவர். (23:58-62)*

இவை சூரா முஃமினூனின் வசனங்களாகும். அடுத்த வசனம் சூரா பய்யினா உடையதாகும். அதன் மொழியாக்கம் இதுவாகும்.

*அவர்களின் இறைவனிடத்தில் அவர்களுக்குரிய வெகுமதி என்றென்றும் நிலைத்திருக்கும் தோட்டங்களாகும். அவற்றையொட்டி ஆறுகள் ஓடும். அவர்கள் அவற்றில் என்றென்றும் வாழ்ந்து வருவர். அல்லாஹ் அவர்களைப் பற்றி திருப்தி கொண்டுள்ளான்; அவர்கள் அவனைப் பற்றியும் திருப்தி கொண்டுள்ளனர். அது தமது இறைவனுக்கு அஞ்சி நடக்கின்றவருக்குரியதாகும். (98:9)*

கடந்த குத்பாவில் ரமலான் தொடர்பான விசயங்களைக் கூறினேன். ரமலானிலிருந்து முழுமையான பலனைப் பெறுவதற்கு தமது சொல்லையும் செயலையும் சீர்திருத்திக் கொள்வது அவசியமானதாகும். அப்போதுதான் இறைவனது பார்வையில் நோன்புகள் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்குரிய வழியாக ஆகும். அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தை உள்ளத்தில் ஏற்படுத்தி எந்த நோன்புகள் வைக்கப்படுகின்றதோ அவைதான் ரமலானின் அருள்களிலிருந்தும் நற்பலனை தருகின்றன என்றும் நான் கூறியிருந்தேன். ரமலான் தொடர்பான விசயங்களைக் கூறியிருந்ததால் நோன்புகளுக்கு உள்ளச்சத்துடன் உள்ள தொடர்பு பற்றி எடுத்துக் கூறப்பட்டது. அவ்வாறில்லையென்றால் மனிதன் செய்ய முயற்சி செய்கின்ற ஒவ்வொரு நன்மையும் அவனது உள்ளத்தில் இறையச்சம் இருக்கும் போதுதான் உண்மையான நன்மையாக அது ஆகிறது. அந்த சமயத்தில் இது தொடர்பாக நான் கூற வேண்டியவை எஞ்சியுள்ளன என்று நான் கூறியிருந்தேன். உள்ளச்சம் தொடர்பாக நான் விளக்கிக் கூற விரும்பினேன். எவ்வாறிருப்பினும், அந்தக் கருத்தில் மேலும் பல விசயங்கள் கூறப்படும். அதை நான் இன்று விளக்கிக் கூறுவேன்.

‘கஷியத்’ என்ற சொல்லை பொதுவாக நாம் பயன்படுத்துகின்றோம். இதன் ஆன்மா பற்றி தெரிந்து விட்டால் நன்மைகளைச் செய்வதில் நமது தரமும் உயர்ந்து விடும். எனவே, இந்த சொல்லின் அகராதிப் பொருளையும் இன்று நான் விளக்க விரும்புகின்றேன். ‘கஷியத்’ என்பதற்கு அச்சம் என்று பொதுவாக பொருள் தரப்படுகிறது. இந்தப் பொருளும் சரியானது தான். எவர்களுக்கு அல்லாஹ்வைப் பற்றிய அச்சம் இருக்குமோ அவர்களுக்கு இந்த அச்சமானது நன்மைகளின் பக்கம் கவனமூட்டுகின்றது. இறைவன் மீதுள்ள அச்சமானது பொதுவாக இருக்கும் அச்சம், பயம் போன்ற ஒன்றல்ல. எனவேதான் அகராதிப் பொருள் கூறுபவர்கள் இதனை விளக்கிக் கூறியுள்ளார்கள். ஓர் அகராதி, ‘ஹஸ்யத்’ என்பதில் பயம் என்ற சொல் அச்சத்துடன் அதிகம் தொடர்புடையதாக இருக்கின்றது என்று கூறுகிறது. ‘ஹஸிய்யத்’ என்ற சொல்லுக்கும் அச்சத்திற்கும் உள்ள ஓர் வித்தியாசம் என்னவென்றால், ஹஸ்யத் என்பதில் யாருக்கு அஞ்சுகின்றோமோ அந்த அச்சம் அந்த நபரின் மகத்துவத்தின்

காரணத்தால் உருவாகியுள்ளது என்ற பொருள் இருக்கின்றது. ஆனால் வெளிப்படையான அச்சம் என்பதில் அஞ்சுபவரது பலவீனத்தை சுட்டிக் காட்டுகின்ற அந்த அச்சத்தின் கருத்து இருக்கின்றது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் அகராதி பொருள்களை மேற்கோள் காட்டி இதுபற்றி விளக்கமாக கூறியுள்ளார்கள்.

**பிறகு இமாம் ராகிப் தமது அகராதி நூலான முப்ரதாதுல் குர்ஆனில் எழுதுகின்றார்கள்:**

அல்கஷியா என்பது ஒருவரது மகத்துவம் உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொள்வதன் மூலம் ஏற்படும் அச்சத்திற்கு கூறப்படுகின்றது. இந்த விசயம் பொதுவாக மனிதன் அஞ்சுகின்ற அந்த விசயத்தைப் பற்றி அறிவு அவனுக்கு இருப்பதால் ஏற்படுகின்றது. இதன் காரணமாகவே, அல்லாஹ்வின் அடியார்களில் அறிவுள்ளவர்களே அவனுக்கு அஞ்சுகின்றனர் (35:29) என்ற திருக்குர்ஆன் வசனத்தில் இறைவனுக்கு அஞ்சுவதை ஆலிம்களின் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. திருக்குர்ஆன் வசனங்களை மேற்கோள்காட்டி சொற்களுக்குரிய பொருள்களின் பல்வேறு அம்சங்களை விளக்கிக் கூறுவது இமாம் ராகிப் அவர்களின் வழிமுறையாகும். அவ்வாறே இந்த வசனத்தைப் பற்றியும் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

இவ்வாறே அவர்கள் இதையும் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மகிமையைக் கண்டு எந்த மக்கள் அஞ்சுகின்றனரோ அவர்கள் தொடர்பாக திருக்குர்ஆனில், அவர்கள், அளவற்ற அருளாளனுக்கு தனிமையில் அஞ்சுகின்றார்கள் என்று வந்துள்ளது (36:12). இறை ஞானத்தைப் பெறுவதற்கான எதிர்பார்ப்பாகிய இறையச்சம் உள்ளத்தில் இருக்கும்போது தான் தனிமையில் இறைவனுக்கு அஞ்சுவது சாத்தியமாகிறது. இதுதான் தனிமையில் இறைவனுக்கு அஞ்சுதல் என்பதன் கருத்தாகும். எனவே, இதுவே 'ஹஸ்யத்' என்பதற்குரிய விளக்கமாகும்.

ஒருவரது மகிமையின் காரணமாக உருவாகின்ற அச்சத்திற்கே 'ஹஸ்யத்' என்று கூறப்படுகிறது. ஒருவரது சுய பலவீனத்தின் காரணமாக இந்த பயம் உருவாகி இருக்கக் கூடாது. நிச்சயமாக அல்லாஹ்வின் மீதுள்ள அச்சம் எப்படிப்பட்டதென்றால் அதில் அல்லாஹ்வின் மகிமை வெளிப்படுத்தப்படுகின்றது. மேலும், பலவீனமான ஓர் அடியான் தனது குறைந்த நிலையை வெளிப்படுத்துவதும் இதில் உள்ளது. அல்லாஹ்வின் மகத்துவம் என்றால் என்ன? அது அல்லாஹ் எல்லா வல்லமைகளின் எஜமானனாக இருக்கின்றான். அவன் ஒவ்வொரு பொருளையும் சூழ்ந்துள்ளான். ஒவ்வொரு பொருளும் அவனால் படைக்கப்பட்டதாகும். அவன் மூலமாகவே அவை நிலைத்துள்ளன. அவை அவனுக்கு சொந்தமானவையாகும். மேலும் அவனது விருப்பதிற்கேற்பவே அவை கிடைக்கும் என்று உறுதி கொள்வதாகும். அப்படிப்பட்ட வல்லமையுள்ள ஆற்றல்மிக்க இறைவன் மீது நம்பிக்கை வைத்து, அவனது அச்சம் உள்ளத்தில் உருவாகி விட்டால் அதன் மூலம்தான் அவனது வல்லமைகளிலிருந்தும் மனிதன் உண்மையான அருளைப் பெற முடியும்.

இங்கு இந்த கேள்வியும் நமது எண்ணங்களில் வருகின்றது. அல்லாஹ்வின் மீதுள்ள உண்மையான அச்சம் ஆலிம்களுக்கு தான் இருக்கின்றதென்றால், தம்மை ஆலிம் என்று கூறிக்கொண்டு தனது எண்ணத்தில் தன்னை ஆலிம் என்று கருதக்கூடிய ஒருவருக்கு அல்லாஹ்வின் மீது உண்மையான அச்சம் இருக்கின்றதா? ஆலிம் அல்லாத ஒருவர் அல்லாஹ் எத்தகைய உள்ளச்சத்தை விரும்புகின்றானோ அத்தகைய தரத்தை அடையாமல் இருக்கின்றாரா? ஆலிமால் மட்டும்தான் இந்த தரத்தை அடைய முடியும் என்பதுதான் அளவுகோல் என்றால், இன்று நாம் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான ஆலிம்களைப் பார்க்கும் போது அவர்களது சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் முரண்பாடு இருப்பது தெரிய வருகின்றது. அவர்கள் சரியான முறையில் திருக்குர்ஆனையும் புரிந்து கொள்ளவில்லை. இந்தக் காலத்தின் இமாமை அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது மட்டுமல்லாமல் அவர்களை எதிர்ப்பதிலும் மிகவும் கீழ்த்தரமான செயல்களைச் செய்வதிலும் இவர்கள் எல்லை மீறி விட்டார். எனினும் இவர்கள் தம்மை ஆலிம்கள் என்று கூறிக் கொள்கின்றனர்.

நிச்சயமாக இந்த விசயங்கள், ஆலிம்கள் என்பதற்குரிய விளக்கம் வேறு என்பதைப் பற்றி சிந்திக்கும் கட்டாயத்திற்கு நம்மை ஆளாக்கியிருக்கின்றது. அல்லாஹ் இங்கு எந்த ஆலிம்களைப் பற்றி கூறுகின்றானோ, யாரை ஆலிம்கள் என்று கூறுகின்றானோ அந்த மக்கள் வேறு வகையில் உள்ளவர்கள் ஆவர். நமது நாட்டில் பொதுவாக சுற்றித் திரிகின்ற மார்க்கத்தைப் பயிற்றுவிக்கும் மத்ரஸாக்களில், மார்க்கக் கல்வி பயின்று முடித்து வெளியேறுகின்ற ஒவ்வொருவரையும் நாம் ஆலிம் என்று கருதுவதாக இருந்தால் அல்லது அவரை பொதுவாக

உலகவாதிகளும் அவரைச் சுற்றியிருக்கின்ற பல நிலையிலுள்ள மக்களும் ஆலிம் என்று கருகின்றனர் என்பதாலோ அல்லது எவர் உலகக் கல்வியைப் பெற்றுள்ளாரோ, மேலும் அதில் அதன் எல்லையை அடைந்து விட்டாரோ, அதாவது அவர் பெரிய விஞ்ஞானியாகவோ, விஞ்ஞான ஆராய்ச்சிகளைச் செய்பவராக இருப்பதாலோ, உலக அறிவில் அவருக்கு ஈடாக எவருமே இல்லை என்பதாலோ ஒருவர் ஆலிம் ஆகிவிட முடியாது. உலகக் கல்வியை மட்டும் பெற்ற ஒருவரை நாம் ஆலிம் என்று கருதுவதும் தவறாகும். உலகக் கல்வியைப் பெறுபவர்களில் சிலர் இறைவனது இருப்பையே மறுக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர். அப்படியிருக்க இறைவனைப் பற்றிய அச்சம் அவர்களது உள்ளத்தில் எப்படி உருவாக முடியும்?

எனவே இங்கு ஆலிம் என்பதற்கான விளக்கத்தை நாம் தேட வேண்டும். உண்மையான ஆலிம் என்பவர் யார்? என்று தேட வேண்டும். உலகப் பேராசைகளால் சூழப்பட்டிருக்கின்ற பெயர்தாங்கி மார்க்க ஆலிம்களைப் பற்றியும் இங்கு குறிப்பிடப்படவில்லை. அவ்வாறே உலகக் கல்வியில் திறமை பெற்றவர்களாக இருப்பவர்களைப் பற்றியும் அவர்கள் ஆலிம்கள் என்று இங்கு குறிப்பிடப்படவில்லை. இங்கு நான் இந்த விசயத்தையும் விளக்கிக் கூறி விடுகின்றேன். எவ்வித சந்தேகமுமின்றி இஸ்லாம் முழுமை பெற்ற மார்க்கமாகும். மார்க்கக் கல்வியைப் பெற்றுள்ள இவர்கள் நாங்கள் மார்க்கக் கல்வியைப் பெற்றுள்ளோம் என்று வாதம் செய்கின்றனர். இவர்களில் சிலர் இஸ்லாத்தின் தூதுச் செய்தியையும் பிறருக்கு எட்ட வைக்கின்றனர். இஸ்லாம் பரவும் என்பதும் அல்லாஹ்வின் விதிகளில் ஒரு விதியாகும். ஆனால் அது இத்தகைய ஆலிம்களின் கைகள் மூலமாக நடக்காது. உலகப் பலன்களை மட்டும் குறிக்கோளாகக் கொண்டுள்ள அல்லது உலகப் பலன்களை மட்டும் அதிகமாக அடைகின்ற ஆலிம்களால் இது நடக்காது. பெயருக்குக் கூட அல்லாஹ்வின் மீது இவர்களுக்கு அச்சம் இல்லை.

இதற்கு முன்னரும் நான் இதைப் பற்றி கூறியிருக்கின்றேன். அதாவது, இந்த முறை எனது அமெரிக்க சுற்றுப் பயணத்தின்போது தொலைக்காட்சியின் பிரதிநிதி ஒருவர், அமெரிக்காவில் இஸ்லாம் பரவுவதற்கு என்ன சாத்தியக்கூறுகள் உள்ளன? என்று என்னிடம் கேள்வி கேட்டார். அதற்கு நான் இஸ்லாம் அமெரிக்காவில் மட்டுமின்றி, இன்ஷா அல்லாஹ் முழு உலகிலும் பரவும். இஸ்லாத்தைக் குத்தகைக்கு எடுத்துள்ளவர்கள் மூலமோ, அல்லது இந்த பெயர்தாங்கி ஆலிம்கள் மூலமோ அது பரவாது. மாறாக, அது அஹ்மதிய்யா ஜமாஅத் மூலமாகவே பரவும். உள்ளங்களை வென்று அமைதி, அன்பு, நேசம் ஆகியவற்றின் போதனைகளை வழங்கியவாறு அது பரவும். தீவிரவாதத்தால் அது பரவாது. இந்த தீவிரவாதத்தின் போதனையைத்தான் இன்றைய ஆலிம்கள் பெரும்பாலும் தந்து கொண்டிருக்கின்றார்கள். ஏனென்றால், இவர்கள் திருக்குர்ஆனின் போதனைகளுக்கு எதிராக உள்ளனர். உண்மையான இஸ்லாம் இப்போது முழுக்க முழுக்க அஹ்மதிய்யா ஜமாஅத்திடம் மட்டுமே இருக்கின்றது. அதை வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமாக தோன்றிய இக்காலத்தின் இமாம் எங்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள். அதை எங்களுக்கு கற்றும் தந்துள்ளார்கள். திருக்குர்ஆனின் போதனைகளை உண்மையான முறையில் அறிந்து புரிந்து கொள்ளும் நிலையை அவர்கள் நமக்கு வழங்கினார்கள். அல்லாஹ்வின் மீதுள்ள அச்சம் பற்றி தெளிவாக விளக்கிக் கூறினார்கள்.

அல்லாஹ்வின் மீதுள்ள உண்மையான அச்சத்தின் மீது எவரும் சொந்தம் கொள்ள முடியாது. ஆலிம்கள் என்றால், அது ஒரு குறிப்பிட்ட வகை மக்களின் பெயர் அல்ல. அல்லாஹ்விற்கு அஞ்சுவது என்பது ஓர் எல்லைக்குட்பட்ட பொருளல்ல. மாறாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகிலுள்ள ஒவ்வொரு மனிதரையும் இறைவனை சந்திக்க வைப்பதற்காகவே வந்தார்கள். மனிதனை இறைவனுடன் ஒன்றியுள்ள மனிதனாக ஆக்குவதற்காகவே அவர்கள் வந்தார்கள். மனிதனிடம் இறைவனைப் பற்றிய அச்சம் உருவாகாதவரை அவன் இறைவனுடன் ஒன்றியுள்ள மனிதனாக ஆக முடியாது. இஸ்லாத்தைத் தழுவிய பிறகு பெரும் பெரும் திருடர்களும், கொள்ளைக்காரர்களும் வலிமார்களாக ஆகிவிட்டார்கள். இறைவனுக்கு அஞ்சுவது பற்றிய அறிவும், அதைப் புரிந்து கொள்ளும் தன்மையும் அவர்களிடம் உருவாகியதனாலேயே இது நிகழ்ந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமது போதனைகளில் பல்வேறு இடங்களில் தஸ்கிரத்துல் அவ்லியாவிலுள்ள சம்பவங்களையும் எடுத்துக் கூறியுள்ளார்கள். பல இடங்களில் இதுபற்றி வந்துள்ளது. நான் தஸ்கிரத்துல் அவ்லியாவிலிருந்து ஓர் உதாரணத்தை இப்போது எடுத்துக் கூறுகின்றேன். உஸைல் பின் அயாஸ்

தொடர்பாக தஸ்கிரத்துல் அவ்லியாவில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஒருமுறை இரவில் ஒரு கூட்டத்தினர் வந்து ஓரிடத்தில் தங்கினார்கள். அவர்களில் ஒருவர் இந்த வசனத்தை ஓதிக் கொண்டிருந்தார்.

*இறைவனை நினைவு கூர்வதால் அவர்களது உள்ளங்கள் அஞ்சுகின்ற அந்த நேரம் நம்பிக்கை கொண்டவர்களுக்கு வரவில்லையா? (57:17)*

இந்த வசனம் உஸைல் அவர்களின் உள்ளத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், அது யாரோ அவர் மீது அம்பு எய்ததைப் போன்று அவருக்கு இருந்தது. அவர்கள் வேதனையை வெளிப்படுத்தியவாறு இந்த கொள்ளையடிக்கும் விளையாட்டு எதுவரை நீடிக்கும்? அல்லாஹ்வின் வழியில் நாம் செல்வதற்கான நேரம் வந்து விட்டது என்று கூறிவிட்டு அவர் சென்றார். அவர் தாரை தாரையாக கண்ணீர் வழிகின்ற நிலையில் அழுது கொண்டே இருந்தார். அப்போதிருந்தே அவர் இறை தியானம் செய்வதில் ஈடுபட்டார். பிறகு ஒரு பாலைவனத்தில் அவர் சென்றார். அங்கு ஒரு கூட்டத்தினர் கூடாரமிட்டு தங்கியிருந்தனர். அவர்களில் ஒருவர் இந்த வழியில் உஸைல் கொள்ளையடிப்பார். எனவே, நாம் நமது வழியை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கூறினார். இதைக் கேட்டதும் உஸைல் அவர்கள் நீங்கள் முற்றிலும் அச்சமற்றவர்களாக இருங்கள். ஏனென்றால், நான் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபடுவதிலிருந்தும் தவ்பா செய்து விட்டேன் என்று கூறினார். பிறகு அவரால் துன்பத்திற்காளான அனைவரிடமும் அவர்கள் மன்னிப்புக் கேட்டார்கள். இவ்வாறு கொள்ளை அடித்துக் கொண்ட ஒருவர், ரஹ்மத்துல்லாஹி அலைஹி என்ற பட்டம் மூலமாக புகழ் பெற்றவராகி விட்டார்.

எனவே, இதுதான் அல்லாஹ்விற்கு அஞ்சுபவர் வெளிப்படுத்திய அற்புதமாகும். இது பற்றிய உணர்வு ஏற்பட்டு விட்டால் அது ஒரு நொடிப்பொழுதில் அவர்களை ஆலிம்களின் அணியில் கொண்டு வந்து நிறுத்தி விடுகின்றது. இந்த நபரை அக்காலத்தில் உள்ளவர்கள் மிகவும் தீயவர் என்று கூறினர். இவரை அவர்கள் விரும்பவில்லை. அதற்கு எதிரில் பெரும் பெரும் ஜிப்பா அணிந்துள்ள பெயர்தாங்கிகள் கர்வத்தில் மூழ்கியிருப்பதை நாம் பார்க்க முடிகின்றது. பொதுவாக உலகம் அவர்களை நல்லவர்கள் என்று கூறினாலும் அவர்களுக்கு உள்ளச்சம் இருப்பதில்லை. அவர்கள் மனிதர்களுடன் கர்வத்துடன் நடந்து கொள்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் ஒருபோதும் இறைவன் மீதுள்ள அச்சத்தை உள்ளத்தில் கொண்டிருப்பதில்லை.

எனவே, இங்கு ஆலிம்களின் அச்சம் என்பது வேறு விசயமாகும். ஆலிம் யார்? உள்ளச்சம் என்றால் என்ன? இதன் உண்மையான விளக்கம் வேறானதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதால் நமக்கு இந்த உண்மையான விளக்கம் தெரிந்து விட்டது. இவ்வகையில் நாம் நற்பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றோம். அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறியுள்ள இந்த விளக்கத்தை நான் அவர்களது சொற்களில் எடுத்துக் கூறுகின்றேன். முதலில் நான் ஒன்றிரண்டு மேற்கோள்களை எடுத்துக் கூற வேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனால், நான் எடுத்துள்ள இந்த சில மேற்கோள்கள் அனைத்துமே நான் கூற வேண்டியவையாகும்.

**ஸய்யதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வின் மகத்துவம், அவனது வல்லமை, அவனது அருள், அவனது அழகு ஆகியவற்றின் மீது முழுமையான அறிவுடையவர்களே அவனுக்கு அஞ்சுகின்றனர். இறைவன் மீதுள்ள அச்சமும், இஸ்லாமும் தனது கருத்தின் அடிப்படையில் ஒரே விசயமாக இருக்கின்றது. முழுமையான இறையச்சத்தின் கருத்து இஸ்லாத்தின் கருத்திற்கு கட்டாயமானதாக இருக்கின்றது. இந்த வசனத்தின் பொருளும், சராம்சமும் இதுதான். இஸ்லாத்தைப் பெற்றுக் கொள்வதற்கான முழுமையான ஊடகம் இந்த இறைவனைப் பற்றியும் அவனது பண்புகளைப் பற்றியும் உள்ள அறிவாகும்.

இந்த வசனத்தில் குறிப்பிட்டிருப்பது என்னவென்றால், எவர்களுக்கு அல்லாஹ்வைப் பற்றியும் அவனது பண்புகளைப் பற்றியும் அறிவு இருக்குமோ அவர்கள் தான் ஆலிம் ஆகின்றனர்.

எனவே, ஒரு உண்மையான முஸ்லிம் ஆக ஆவதற்கு அல்லாஹ்வின் மகிமை மற்றும் அவனது பண்புகள் பற்றிய அறிவு இருப்பது அவசியமாகும். இது இறைவனைப் பற்றிய அச்சம் இல்லாமல் ஏற்பட முடியாது.

இதனை ஒரு குறிப்பிட்ட பிரிவினர்தான் பெற முடியும். மற்றவர்களால் இதைப் பெற முடியாது என்ற எவ்வித பாகுபாடும் இதில் இல்லை. தத்தமது ஆற்றல்களுக்கேற்ப ஒவ்வொரு மூஃமினும் அதைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் ஈமானில் முன்னேற்றம் ஏற்படும். அல்லாஹ்வுடன் உள்ள தொடர்பில் முன்னேற்றம் ஏற்படும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறையச்சம், இஸ்லாம் ஆகியவற்றை ஒரே விசயமாக கூறி உண்மையான முஸ்லிமை ஆலிம்களின் அணியில் கொண்டு வந்து நிறுத்தி விட்டார்கள். அத்துடன் நம்மீது சில பொறுப்புகளையும் சுமத்தியுள்ளார்கள். அதாவது அல்லாஹ்வின் பண்புகளைப் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளுங்கள். பிறகு அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப இந்த நிறத்தை இந்த இறைபண்புகளை மேற்கொண்டு உங்களிடத்தில் அவற்றை வெளிப்படுத்திக் காட்டுங்கள். இந்த நிலை ஏற்பட்டால் பிறகு மேலும் அருள்களின் கதவுகள் திறக்கும்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பெரும்பாலும் மனிதனின் சிறப்புத்தன்மை எதில் உள்ளது என்றால், அவன் இறைவனைப் பற்றிய முழுமையான அறிவைப் பெறுவதன் மூலம் நேர்வழியைப் பெற்றுக் கொள்கின்றான். இதுபற்றி அல்லாஹ் கூறுகின்றான்: எவர்களுக்கு ஷய்த்தானின் இயல்பு இருக்கின்றதோ, அவர்கள் இந்த சட்டத்திலிருந்தும் விதிவிலக்குப் பெற்றவர்களாவர். எவர்களது இயல்பில் ஷய்த்தானிய தன்மை புகுந்துள்ளதோ அவர்கள் இந்த விதிக்கு அப்பாற்பட்டவர்களாக உள்ளனர். எவர்கள் தாங்கள் அறிவைப் பெற்றுக் கொண்டதாக வாதம் புரிந்து நேர்வழியின் பாதையில் செல்லாமல் இருக்கின்றாரோ அவருக்கு எந்த அளவு வெளிப்படையான அறிவு இருந்தாலும் அவர் ஆலிம் ஆகமாட்டார். எவராவது இவ்வாறு கூறும் அந்த நபர் திருக்குர்ஆனைப் படித்துள்ளார் என்று கூறினாலும் எந்நிலையிலும் திருக்குர்ஆன் தவறானதாக இருக்க முடியாது. அதைக் கற்றுக் கொள்பவரின் வாதம் தவறானதாகும். அவர் அதன் ஆன்மாவைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்யவில்லை. குர்ஆன் நிச்சயமாக இறையச்சமுள்ள உள்ளத்திற்கு அறிவையும் இறைஞானத்தையும் வழங்கும். ஆனால் தற்பெருமையுள்ள, இறையச்சத்திலிருந்தும் காலியாக இருக்கின்ற உள்ளத்திற்கும், அநீதியிழைப்பவர்களுக்கும் நஷ்டத்தைத் தவிர திருக்குர்ஆன் எதையும் வழங்காது.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அறிவு என்பதன் கருத்து தர்க்க சாஸ்திரமோ தத்துவமோ அல்ல. அல்லாஹ் முழுக்க முழுக்க தனது அருளால் மட்டும் வழங்குவதே உண்மையான அறிவாகும். இந்த அறிவு அல்லாஹ்வைப் பற்றிய ஞானத்தைப் பெறுவதற்கான வழியாக இருக்கின்றது. இதன் மூலம் இறைவன் மீதுள்ள அச்சம் உருவாகின்றது. திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்: அறிவின் மூலமாக அல்லாஹ்வுக்கு அஞ்சுவதில் முன்னேற்றம் ஏற்படவில்லையென்றால், அந்த அறிவு இறைஞானத்தில் முன்னேறுவதற்கான வழி அல்ல என்பதை நினைவில் வையுங்கள்.

எவர்களது நாவுகளில் பொய்யைத் தவிர வேறு எதுவும் வருவதில்லையோ, எவர்களது செயல்கள் உலக பேராசைகளிலிருந்தும் விடுபட்டு வெளியே வருவதில்லையோ, எவர்களது நாவுகள் அசுத்தமானவற்றைத் தவிர வேறு எதையும் பேசுவதில்லையோ,

இப்போது பாகிஸ்தானில் பாருங்கள்! இங்கும் பெரும்பாலான பள்ளிவாசல்களில் குத்பா உரையின் போது ஜமாஅத்திற்கு எதிராகவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராகவும் தரக்குறைவான சொற்களைத் தவிர வேறு எதையும் இவர்கள் கூறுவதில்லை. எவர்களது உள்ளத்தில் அல்லாஹ்வைப் பற்றிய அச்சம் இருக்குமோ, அப்படிப்பட்ட ஆலிம்களா இவர்கள்? இதற்கு ‘இல்லை’ என்பதுதான் பதிலாகும்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நினைவில் கொள்ளுங்கள். தடுமாற்றம் எப்போதும் அறிவற்றவர்களுக்கே ஏற்படுகின்றது. ஷய்த்தானுக்கு ஏற்பட்ட தடுமாற்றம் அவனது அறிவின் காரணமாக ஏற்படவில்லை. அறியாமையின்

காரணமாகவே ஏற்பட்டது. அவன் முழுமை பெற்ற அறிவை உடையவனாக இருந்திருந்தால் அவனுக்கு தடுமாற்றம் ஏற்பட்டிருக்காது. திருக்குர்ஆன் அறிவைப் புறக்கணித்து ஒதுக்கவில்லை. மாறாக, *அல்லாஹ்வின் அடியார்களில் அறிவுள்ளவர்களே அவனுக்கு அஞ்சுகின்றனர்* என்று கூறுகிறது.

பிறகு கூறுகின்றார்கள்: பாதி முல்லாவாக இருப்பது ஈமானுக்கு அபாயகரமானதாகும் என்பது புகழ்பெற்ற சொற்றொடராகும். என்னை எதிர்த்தவர்களை அவர்களது அறிவு அழிக்கவில்லை. அவர்களது அறியாமைதான் அவர்களை அழித்தது.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவனைச் சார்ந்துள்ள ஆலிம் என்பதன் கருத்து அரபி இலக்கணத்திலும் தர்க்கசாஸ்திரத்திலும் அவர்களுக்கு ஈடாக வேறு எவரும் இருக்க முடியாது என்பதல்ல. இறைவனைச் சார்ந்துள்ள ஆலிம் என்பவர் எப்போதும் இறைவனுக்கு அஞ்சியவாறு இருப்பவராவார். இன்றைய காலகட்டம் எப்படிப்பட்டதென்றால் சடலத்தைக் குளிப்பாட்டுபவர்கள் கூட தங்களை ஆலிம்கள் என்று கூறிக் கொள்கின்றனர். துணைக் கண்டத்திலுள்ள சில இடங்களில் சடலத்தைக் குளிப்பாட்டுவதற்காக குறிப்பிட்ட சில நபர்களைத் தேடுகின்றனர். எல்லாரும் சடலங்களை குளிப்பாட்ட முடியாது. இவ்வாறு குளிப்பாட்டுபவர்கள் தங்களை ஆலிம்கள் என்று கூற ஆரம்பித்து விட்டனர்.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த சொல்லை அவர்கள் தங்களுக்கு சொந்தமாக்கிக் கொண்டார்கள். இவ்வாறு இந்த சொல் அதிகமாக தரம் தாழ்த்தப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் நோக்கம் மற்றும் நாட்டத்திற்கு எதிராக இதன் கருத்து எடுக்கப்பட்டிருக்கின்றது. திருக்குர்ஆனில் ஆலிம்களின் இந்த பண்பு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

அல்லாஹ்வுக்கு அஞ்சுபவர்கள் அல்லாஹ்வின் அந்த அடியார்களான ஆலிம்கள் ஆவர். எந்த மக்களிடம் அல்லாஹ்வைப் பற்றிய பயமும், அச்சமும், தக்வாவும் இல்லையோ அவர்கள் அறவே இந்த சொல்லால் அழைக்கப்பட தகுதியற்றவர்களாவர்.

கூறுகின்றார்கள்: 'உண்மையில் உலமா என்பது ஆலிம் என்பதன் பன்மைச் சொல்லாகும். இல்ம் அதாவது அறிவு உறுதியானதாகவும் மறுக்க முடியாததாகவும் இருக்கின்ற ஒன்றுக்கே கூறப்படுகிறது. மேலும் உண்மையான அறிவு திருக்குர்ஆன் மூலம் கிடைக்கின்றது. அது யுனானிகளின் தத்துவத்தின் மூலமாகவோ இப்போது இங்கிலாந்திலுள்ள தத்துவத்தின் மூலமாகவே கிடைக்காது. மூஃமினுடைய முழுமைத்தன்மையும் மிஃராஜும் ஆலிம்களின் தகுதியைப் பெறுவதில்தான் இருக்கின்றது.'

இங்கு சிறப்பாக யாரையும் குறிப்பிட்டுக் கூறாமல் மூஃமினுடைய முழுமைத்தன்மையும் மிஃராஜும் ஆலிம்களின் தகுதியைப் பெறுவதில்தான் இருக்கின்றது என்று கூறுகின்றார்கள்.

'நிச்சய உறுதியின் உயர் தகுதியை அவர் பெற வேண்டும். இதுவே அறிவின் இறுதி தகுதியாகும்.' நம்பிக்கை கொள்கின்ற ஒவ்வொரு முஸ்லிமும் தனது ஈமானில் முன்னேறும் போது மூஃமின் என்று அழைக்கப்படுகின்றார். ஆலிம் ஆவதற்கான டிகிரியில் அவர் வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்பது அவசியமானதல்ல.

கூறுகின்றார்கள்: அவர்கள் ஆலிம்களின் தகுதியை அடைந்தனர். (ஹக்குல் யகீன்).

நிச்சய உறுதியின் உயர் தகுதியை அவர் பெற வேண்டும். இதுவே அறிவின் இறுதி தகுதியாகும். ஆனால் எந்த நபர் உண்மையான அறிவைப் பெறவில்லையோ, எவர்களுக்கு இறைஞானம் மற்றும் அகப்பார்வையின் வழிகள் திறக்கப்படவில்லையோ அவர் தம்மை ஆலிம் என்று கூறினாலும் அவர் அறிவின் சிறப்புகள், பண்புகள் ஆகியவற்றிலிருந்தும் முற்றிலும் பலனடையாதவராகவே இருக்கின்றார். உண்மையான அறிவின் மூலம் கிடைக்கும் அந்த பிரகாசமும் ஒளியும் அவரிடம் இருக்காது. மாறாக, அப்படிப்பட்ட மக்கள் நஷ்டத்திலும் இழப்பிலும் இருக்கின்றனர். இவர்கள் தமது மறுமையை புகை மற்றும் இருளால் நிரப்பிக் கொள்கின்றனர். எவர்களுக்கு உண்மையான இறை ஞானமும் அகப்பார்வையும் வழங்கப்படுகிறதோ எந்த அறிவின் விளைவு இறையச்சமாக அவர்களுக்கு வழங்கப்படுகிறதோ அப்படிப்பட்ட மக்களை இஸ்ரவேல் சந்ததிகளிலுள்ள நபிமார்களுக்கு ஒப்பாக ஹதீஸில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

எனவே, உண்மையான ஆலிம்கள் இப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர். இன்றைய காலத்திலுள்ள ஆலிம்களைப் பற்றி அதாவது, தங்களது எண்ணத்தில் மட்டும் ஆலிமாக இருப்பவர்கள், செயல் எதுவும் இல்லாமல் இருப்பவர்கள் தொடர்பாக ஹதீஸில், அவர்களது உலமாக்கள் அதாவது இந்த காலத்திலுள்ள உலமாக்கள் வானத்தின் கீழ் உள்ளவர்களில் மிகவும் தீய படைப்பினமாக இருப்பார்கள். அவர்களிடமிருந்தே குழப்பங்கள் தோன்றி அவர்களிடமே அது திரும்பிச் சென்று விடும் என்று கூறப்பட்டுள்ளது.

இன்றைய நாட்களில் நீங்கள் இதை பாருங்கள். எத்தனை சண்டைகள், குழப்பங்கள் உருவாகி இருக்கின்றதோ அது இந்த பெயர்தாங்கி ஆலிம்களாலேயே ஏற்பட்டுள்ளது. இதிலிருந்தும் ஆலிம் என்று தம்மை கூறிக் கொள்ளும் ஒவ்வொருவரும் அல்லாஹ்விற்கு அஞ்சுபவராக ஆகாதவரை அவர் ஆலிம் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. பெரும்பாலும் தீமைகளுக்கும் குழப்பங்களுக்கும் காரணமாக இந்த பெயர்தாங்கி ஆலிம்களே உள்ளனர் என்பதை நாம் பார்க்கின்றோம்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தக்வா மற்றும் இறைவனுக்கு அஞ்சுவது ஆகியோரின் மூலம் அறிவு பிறக்கின்றது. இதைப் பற்றி அல்லாஹ்வே கூறுகின்றான். ஆலிம்களாக இருப்பவர்கள்தான் அல்லாஹ்வுக்கு அஞ்சுகின்றனர். இதிலிருந்தும் உண்மையான அறிவு இறைவனைப் பற்றிய அச்சத்தை உருவாக்கும் என்பது தெளிவாகத் தெரிகிறது. மேலும் இறைவன் அறிவை தக்வாவுடன் தொடர்புபடுத்திக் கூறியுள்ளான். எவர் முழுமையான முறையில் ஆலிமாக இருப்பாரோ அவரிடம் கண்டிப்பாக இறைவனைப் பற்றிய அச்சம் உருவாகும்.

'இல்ம்' அதாவது அறிவு என்பதன் கருத்து, எனது பார்வையில் இல்முல் குர்ஆன். அதாவது திருக்குர்ஆன் அறிவாகும். தத்துவம், விஞ்ஞானம் அல்லது மற்ற அறிவுகள் என்பது இதன் கருத்து அல்ல. இவற்றைப் பெறுவதற்கு தக்வா, நன்மை ஆகியவை நிபந்தனையாக வைக்கப்படவில்லை. எவ்வாறு ஒரு தீயவர், ஒரு குழப்பவாதி அவற்றை கற்க முடியுமோ அவ்வாறே மார்க்கப் பற்றுள்ள ஒருவரும் அதை கற்றுக் கொள்ள முடியும். ஆனால் திருக்குர்ஆனின் அறிவு இறையச்சமுள்ளவர் மற்றும் மார்க்கப் பற்றுள்ளவர் ஆகியோரைத் தவிர வேறு எவருக்கும் வழங்கப்படமாட்டாது. இங்கு அறிவு என்பதன் கருத்து, திருக்குர்ஆனின் அறிவேயாகும். அதன் மூலம் தக்வா மற்றும் இறைவனைப் பற்றிய அச்சம் உருவாகின்றது.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உலமா என்ற சொற்களால் ஏமாந்துவிடக் கூடாது. அல்லாஹ்வுக்கு அஞ்சுபவர்களே ஆலிம்கள் ஆவர். அதாவது, சந்தேகமின்றி எந்த மக்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுகின்றனரோ அவர்களே அவனது அடியார்களில் ஆலிம் ஆக இருக்கின்றனர். அவர்களிடம் முழுமையான அடியான் என்ற நிலையும் இறைவனைப் பற்றிய அச்சமும் எந்த அளவு உருவாகின்றதென்றால் அவர்கள் தாமே இறைவனிடமிருந்து ஓர் அறிவையும் இறை ஞானத்தையும் கற்றுக் கொள்கின்றனர். அவனிடமிருந்தே அருளைப் பெறுகின்றனர். இந்த உயர் தகுதியும் தர்ஜாவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றுவதன் மூலமாகவும் அன்னாரை முழுமையாக நேசிப்பதன் மூலமாகவும் கிடைக்கின்றது. அதாவது மனிதன் பெருமானார் (ஸல்) அவர்களது நிறத்தைப் பெற்றவனாக ஆகிவிட வேண்டும்.

எனவே, இதுதான் ஆலிமின் உண்மை நிலையாகும். இதுதான் உலமாக்களிடம் இறையச்சம் ஏற்படுகின்றது என்பதன் சரியான கருத்தாகும்.

இந்த மேற்கோள்கள் மூலம் எங்கு உண்மையான ஆலிம் மற்றும் பெயர்தாங்கி ஆலிம் ஆகியோருக்கு இடையிலுள்ள வித்தியாசம் நமக்கு தெரிந்து விட்டதோ அங்கு நமது கவனமும் இதன் பக்கம் திருப்பப்பட்டுள்ளது. அதாவது நீங்கள் உண்மையான தக்வாவை மேற்கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தை உங்களிடம் உருவாக்க வேண்டும். இது ஒரு மூஃமினுக்கு அவசியமானதாகும். அதன் மூலம் நீங்கள் உண்மையான மூஃமினாகவும் முஸ்லிமாகவும் ஆக முடியும். இதற்கான பொறுப்பு நம்மீது சுமத்தப்பட்டுள்ளது. இது குறிப்பாக எந்தப் பிரிவினருடனும் தொடர்புடைய ஒன்றல்ல. தக்வாவை மேற்கொள்ள வேண்டும் என்ற

கட்டளை ஒவ்வொரு மூஃமினுக்கும் இருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரிக்கேற்ப நடப்பது ஒவ்வொருவருக்கும் அவசியமானதாகும். இது இல்லாமல் இறைவனுடைய அன்பு கிடைக்கவே முடியாது.

எனவே தனது நெருக்கத்தின் கதவுகளை அல்லாஹ் திறந்து வைத்துள்ள இந்த ரமலானில் அவன் தக்வாவில் நாம் முன்னேறிச் செல்வதற்கு உதவியாக இருக்கக் கூடிய சுற்றுச்சூழலையும் நமக்கு உருவாக்கித் தந்துள்ளான். அது பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றும்படி நமது கவனத்தை திருப்பக் கூடியதாக இருக்கின்றது. ஹதீஸ் தர்ஸும் நடக்கும். குர்ஆன் தர்ஸும் நடக்கும். அவற்றை நாம் கேட்கவும் செய்கின்றோம். அவற்றிலிருந்து நாம் முழுமையாக பலன்பெற வேண்டும். திருக்குர்ஆனை ஓதும்போதும் கேட்கும்போதும் தக்வாவில் நம்மை முன்னேறச் சொல்கின்ற அந்த அறிவையும் இறை ஞானத்தையும் நாம் தேட வேண்டும். அவை இறைவன் மீதுள்ள அச்சத்தை உருவாக்கும்.

நான் ஆரம்பத்தில் ஓதிய வசனங்களின் ஒளியில் சில விசயங்களைக் கூறுகின்றேன். நான் ஆரம்பத்தில் ஓதிய 5 வசனங்கள் சூரத்துல் மூஃமினூன் உடையதாகும். அதில் ஒரு உண்மையான முஸ்லிமின் சிறப்பம்சங்கள் கூறப்பட்டிருக்கின்றது. முதலாவது வசனத்தில், உண்மையான மூஃமின்கள் தமது இறைவன் மீதுள்ள அச்சத்தால் நடுங்குவர் என்று கூறப்பட்டுள்ளது. இந்த அச்சம் ஒரு உண்மையான மூஃமினிடம் இருக்க வேண்டும். ஏற்கனவே நாம் விளக்கிக் கூறியது போன்று அல்லாஹ்வின் மகிமையை ஏற்றுக் கொள்வதுடன் அல்லாஹ் எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானனாக இருக்கின்றான் என்று கருதியவாறு அவனுக்கு அஞ்சி நடுங்க வேண்டும்.

பிறகு உண்மையான மூஃமின்கள் அல்லாஹ்வின் வசனங்களின் மீது நம்பிக்கை கொள்வர் என்று கூறப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் வசனங்கள் என்பதன் கருத்து, அல்லாஹ் கூறியுள்ள எல்லா விதமான கட்டளைகள் என்பதாகும். திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள அற்புதங்கள் மற்றும் அதன் ஒவ்வொரு கட்டளையும் இதில் அடங்கும். இவற்றை செயல்படுத்துவது ஒரு மூஃமினுக்கு அவசியமானதாகும். ஈமான் கொள்ளும் போது முழுமையான ஈமான் எப்போது ஏற்படும் என்றால், அதற்கேற்ப செயல்படவும் வேண்டும். பிறகு இந்த செயல் ஈமானில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு காரணமாக அமையும்.

பிறகு இறைவன் கூறுகின்றான்: உண்மையான முஸ்லிம் தனது இறைவனுக்கு இணையாக யாரையும் வைக்க மாட்டார். எவருக்கு இறைவன் மீது அச்சம் இருக்கின்றதோ, இறை வசனங்கள் மீது நம்பிக்கை இருக்கின்றதோ அவர் ஷிர்க் வைக்க மாட்டார். வெளிப்படையான இப்படிப்பட்ட இணைவைத்தலில் அவன் ஈடுபடாமல் இருந்தாலும் சில சமயம் மனிதனிடம் மறைவான ஷிர்க் ஏற்பட்டு விடுகின்றது. எனவே, நுட்பமான பார்வையுடன் தன் மீது அவர் பார்வையைச் செலுத்த வேண்டும். அப்போதுதான் உண்மையான முஸ்லிம் ஆக அவர் முடியும். தனது சொல்லையும் செயலையும் ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் உண்மையில் நிலைத்திருக்கும்படி செய்ய வேண்டும். நான்காவது விசயமாக இந்த வசனத்தில் அவர்கள் மார்க்கத்திற்கு தொண்டு புரிவர் என்றும் கூறப்பட்டுள்ளது. அதற்காக அவர்கள் பொருளையும் செலவு செய்கின்றனர். நேரத்தையும் செலவு செய்கின்றனர். இறை கட்டளைக்கேற்ப செயல்படவும் அவர்கள் முயற்சி செய்கின்றனர். உண்மையான மூஃமின்களின் உள்ளத்திற்கு இந்த ஒரு விசயத்தால் எப்போதும் அச்சம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும். அதாவது நாம் இந்த அனைத்து காரியங்களையும் செய்துள்ளோம். அல்லாஹ் இவற்றை ஏற்றுக் கொள்கின்றானா? இல்லையா? என்று தெரியவில்லையே! என அவர்கள் அஞ்சுவர். இறைவனது திருப்தியிலிருந்தும் விலக்கிக் கொண்டு செல்கின்ற மறைவான எந்த தவறும் நம்மிடம் ஏற்பட்டு விடக்கூடாது. எங்காவது மறைமுகமான இணைவைத்தல் நமது செயல்களின் தீய விளைவுக்கு காரணமாக ஆகிவிடக் கூடாது. எங்காவது ஏதாவதொரு கட்டளைக்கு ஏற்ப செயல்படாமல் இருப்பது அல்லது பலவீனத்தை வெளிப்படுத்துவது ஈமானில் குறைவு ஏற்படக் காரணமாக இருந்துவிடக் கூடாது. எங்களது அல்லாஹ்வின் மீதுள்ள அச்சம் வெறும் வெளிவேசமாக இருந்துவிடக் கூடாது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! *இறைவனால் வழங்கப்பட்ட பொருளை கொடுத்துக் கொண்டிருப்பவர்களும், உள்ளச்சம் கொண்டிருப்பவர்களும்* என்பதன் பொருள், மனிதன் தான்

விரும்பியதை செய்யலாம். ஆனால் இறைவனுக்கு அஞ்சியவாறு இருக்க வேண்டும் என்பது தானா? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், இல்லை; மாறாக, மனிதன் நன்மைகளைச் செய்ய வேண்டும். அத்துடன் இறைவனுக்கு அஞ்சியவாறு இருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

எப்போதும் இறைவன் தன்னிறைவு பெற்றவனாவான் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு நன்மையை அவன் ஏற்றுக் கொள்ளலாம். அவன் விரும்பினால் மற்றொரு நன்மையை ஏற்றுக் கொள்ளாமலும் இருக்கலாம். எனவே ஒவ்வொரு நொடியும் அவனைப் பற்றிய அச்சம் இருக்க வேண்டும். நாம் நமது எஜமான் முன்னால் செல்லும்போது அவன் நம்மை மன்னிக்க வேண்டும். எனவே தனது நன்மைகள் மீது எவருக்கும் பெருமை இருக்கக் கூடாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது துஆக்களில் இந்த துஆவையும் சேர்த்துள்ளார்கள். அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ஸஹர் பின் யோசப் அறிவிப்பு செய்கின்றார்கள். நான் ஹஸ்ரத் உம்மே ஸல்மாவிடம் மூஃமின்களின் தாயே! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உங்களிடம் இருக்கும் போது அதிகமாக எந்த துஆவை செய்து வந்தார்கள் என்று நான் கேட்டேன். இதைக் கேட்டதும் உம்மே ஸல்மா (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த துஆவை ஓதி வந்தார்கள். யா முகல்லிபல் குலூபி ஸப்பித் கல்பி அலா தீனிக்க – உள்ளங்களை திருப்பக் கூடியவனே! எனது உள்ளத்தை உனது மார்க்கத்தில் உறுதியாக நிலைத்திருக்கச் செய்வாயாக!

ஹஸ்ரத் ஸல்மா கூறுகின்றார்கள்: நான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இந்த துஆவை அன்னார் தொடர்ந்து செய்து வருவதற்கான காரணத்தைக் கேட்டேன். அதைக் கேட்டு விட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் உம்மு ஸல்மாவே! ஒவ்வொரு மனிதனின் உள்ளமும் அல்லாஹ்வின் இரண்டு விரல்களுக்கு இடையில் இருக்கின்றது. யாரை விரும்புகின்றானோ அவரை அவன் உறுதியான பாதங்களுடன் மார்க்கத்தில் நிலைத்திருக்கும்படி செய்கின்றான். தான் விரும்புகின்றவரை கோணலாக்கி விடுகின்றான் என்று கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் நமக்கு நேர்வழியை வழங்கக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். அவர்களது முன்மாதிரியைப் பின்பற்றிச் செல்வதன் மூலம் உண்மையான தக்வா, இறைவன் மீதுள்ள அச்சம் பற்றி நமக்கு தெரிய வருகிறது. அவற்றைப் பின்பற்றுவது நம்மை இறைவனுக்கு பிரியமானவர்களாக ஆக்குகின்றது. பெருமானார் (ஸல்) அவர்களது இறையச்சத்தின் தரம் இவ்வாறு இருக்கும் போது, இறைவனுக்கு அவர்கள் இந்த அளவு அஞ்சியிருக்கும் போது நாம் எந்த அளவு அவனுக்கு அஞ்ச வேண்டும்? இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: யார் இத்தகு நிலையை உருவாக்கிக் கொள்கின்றாரோ அவர்கள் தான் நன்மைகளில் ஒருவருக்கொருவர் முந்துபவர்களாக உள்ளனர். தமது நிலைமைகள் பற்றி சிந்திக்கும் போதுதான் நன்மைகளில் ஒருவர் மற்றவரை முந்துவது தொடர்பாக கவனம் ஏற்படும். மேலும் மனிதன் அதற்காக முயற்சி செய்கின்றான் அல்லது இத்தகு நன்மைகளைச் செய்பவர்களது பாதங்கள் பிறகு நன்மைகளில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கும். எல்லா நன்மைகளையும் செய்ய அவர்கள் முயற்சி செய்கின்றனர். தக்வாவில் முன்னேற முயற்சி செய்கின்றனர். ஆனால் இவ்விசயத்தில் அவர்களுக்கு எவ்வித பெருமையும் இருப்பதில்லை. ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு சமயத்திலும் அவர்களது உள்ளம் இறைவன் பக்கம் குனிகிறது. இந்த நிலைதான் இறைவனின் நெருக்கத்தைப் பெற்றுத் தருகின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மீது செய்துள்ள அருள்களில் இதுவும் ஒரு மிகப்பெரிய அருளாகும். அவர்கள் துஆக்களை கேட்பதற்கான வழிமுறையையும் நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். ஒரு துஆ பற்றி ஹதீஸில் இவ்வாறு வருகிறது. உண்மையில் இது நமக்காக கூறப்பட்டதாகும். நம்மில் ஒவ்வொருவரும் இந்த துஆவை செய்ய வேண்டும்.

அப்துல்லாஹ் பின் அம்ர் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்து வந்தார்கள்.

அல்லாஹ்வே! நான் உனக்காக குனியாத உள்ளத்தை விட்டும், கேட்கப்படாத துஆவை விட்டும், நிறைவடையாத உள்ளத்தை விட்டும், பயனளிக்கா அறிவை விட்டும் நான் உன்னிடம் அடைக்கலம் தேடுகின்றேன். இந்த துஆவை புரிந்து கொள்பவர்களாகவும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக!

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இன்னொரு துஆவையும் நான் கூறுகின்றேன். பணிவு மற்றும் இறையச்சத்தின் மிக உயர்ந்த நிலையை இந்த துஆ அடைந்துள்ளது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் மீதிருந்த அச்சத்தின் முழுமையான முன்மாதிரியாக இது இருக்கின்றது. ஹஜ்ஜத்துல் விதாவின் போது துஆ செய்தவாறு அவர்கள் தமது எஜமானனிடம் இவ்வாறு வேண்டுகின்றார்கள்:

அல்லாஹ்வே! நீ என் விசயங்களைக் கேட்கின்றாய்! என் நிலையைப் பார்க்கின்றாய்! எனது மறைமுகமான வெளிப்படையான விசயங்களை நீ நன்கு அறிகின்றாய். எனது எந்த விசயமும் உனக்கு மறைமுகமாக இல்லை. நான் மோசமான நிலையில் இருக்கும் ஏழையாகவும், தேவைகள் உடையவனாகவும் இருக்கின்றேன். உனது உதவியையும் அடைக்கலத்தையும் வேண்டுகின்றேன். நான் அச்சத்துடன் என் பாவங்களை ஒப்புக் கொள்கின்ற நிலையில் உன்னிடம் வந்துள்ளேன். நான் உன்னிடம் ஓர் எளிய தேவை உடையவனைப் போன்று யாசிக்கின்றேன். உனக்கு முன்னால் ஒரு இழிவான பாவியைப் போன்று நான் அழுகின்றேன். ஒரு பார்வையற்ற குருடனைப் போல் அஞ்சியவாறு உன்னிடம் துஆ செய்கின்றேன். உன் முன்னால் என் கழுத்து குனிந்துள்ளது. எனது கண்கள் உன் முன்னால் கண்ணீர் வடிக்கின்றது. உன் முன்னால் என் உடல் உனக்கு கட்டுப்பட்டு ஸஜ்தாவில் வீழ்ந்து கிடக்கின்றது. எனது மூக்கு மண்ணில் இருக்கின்றது. அல்லாஹ்வே! உன்னிடம் துஆ வேண்டுவதில் நீ என்னை பாக்கியமிழந்தவனாக ஆக்கி விடாதே! மேலும் என்னுடன் தயவுடனும் கருணையுடனும் நடந்து கொள்வாயாக! எல்லாரையும் விட அதிகமாக மன்றாடல்களை ஏற்றுக் கொள்பவனே! எல்லாரையும் விட சிறப்பாக வழங்குபவனே! எனது துஆவை ஏற்றுக் கொள்வாயாக!

எனவே, இந்த மகத்தான நபி (ஸல்) அவர்கள் இறைவனுக்கு அஞ்சுவதில் மகத்தான முன்மாதிரியை ஒவ்வொரு நொடியும் தனது உம்மத்திற்கு முன்னால் எடுத்து வைத்துள்ளார்கள். பெருமானார் (ஸல்) அவர்களது ஒவ்வொரு துஆவையும், அவர்களது ஒவ்வொரு செயலையும் பாருங்கள். இறையச்சத்தால் அது நிரம்பி இருக்கின்றது. இறைவன் மீதுள்ள அச்சத்தால் அவர்கள் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இறைவனுக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்தும் கூட, அவர்களோடு ஒன்றிவிடுபவர்கள் ரலியல்லாஹூ அன்ஹும் என்ற நற்செய்தியைக் கேட்பவர்ளாக இருந்தனர். இந்த இறையச்சத்தை இந்த நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூலம் இந்த விசயத்தை நாம் நம்மிடம் உருவாக்கினால் அதன் மூலம் அல்லாஹ்வின் அருள்களை பெறக்கூடியவர்களாக நாம் ஆகிவிடுவோம்.

இந்த ரமலானில் அல்லாஹ்வுக்கு அஞ்சுகின்ற அந்த உண்மையான ஆன்மாவை புரிந்தவாறு அதற்கேற்ப நமது வாழ்க்கையை கழிப்பவர்களாக நாம் ஆவதற்கான நல்வாய்ப்பினை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக!

இந்த ரமலான் நம்மிடம் ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாக அமையுமாறு அல்லாஹ் செய்வானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAITUL FUTUH MOSQUE, LONDON.
**ON 03.08.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456